1983 ஜனவரி 28

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: தனிக் கேள்வி போடவும்

ஆனைமடுவு ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம்

*வினா எண் 36 திரு இரா. திருமன்: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதி புழுதிக்குட்டையில் உள்ள ஆனை மடுவு ஆற்றின் குறுக்கே நீரைத்தேக்க அணை கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: (அ) அன்டு (ஆ) சேலம் மாவட்டம். சேலம் வட்டக்குறிச்சி கிராமத்திற்கு அருகில் ஆனைமடுவு ஆற்றின் குறுக்கே ரூ. 554 இலட்ச மதிப்பீட்டுச் செலவில் ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. திட்டப்பணிகள் தொடங்கப் பட்டுள்ளன.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்காடு தொகுதி குறிச்சி கிராமத்திற்கு அருகில் ஆனைமடுவுத் திட்டமும் கரியகோவில் நீர்த்தேக்கத் திட்டமும் ஆற்றின் குறுக்கே இந்த நீர்த்தேக்க திட்டம் அமுல் செய்யப்படுவதால் ஏற்கனவே அங்கே பயிர் செய்யக்கூடியவர் களுக்கு தண்ணீர் செல்வது பாதிக்கப்படாது என்று உத்திரவாதம் அளிக்கப்படுமா? அதேபோல் அதன் கீழே உள்ள ஆயக்கட்டுத் தாரர்கள் தண்ணீர் வராது என்று எண்ணுவதால் அந்தப்பகுதி விவசாயிகள் பீதி அடைகிறார்கள். ஆகவே அவர்களுக்கு தண்ணீர் அளிப்பதற்கு உத்திரவாதம் கொடுக்கமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த திட்டம் வருவதற்கு முன்பே அங்கு என்ன நிலையோ அதைதான் இப்போதும் அங்கே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதிலே எந்த மாறுதலும் இல்லை. ஏற்கனவே இதன் மூலம் தண்ணீர் பெற்ற ஆயக்கட்டுத்தாரர்கள் பாதிக்கப்படாத அந்த அடிப்படையில்தான் திட்டம் போடப் பட்டிருக்கிறது. ஏற்கனவே அங்கு நடந்த ஒரு விழாவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருகை தந்து இந்தப் பிரச்னைப்பற்றி கேட்டார்கள். அப்போதே அதிகாரிகளை கலந்து பேசி ஏற்கனவே இருக்கிற ஆயக்கட்டுதாரர்கள்

1983 சனவரி 28]

விவசாயிகள் பாதிக்கப்படாத நிலையில் திட்டம் நிறைவேற்ற வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது.

தமிழகத்தில் பஞ்சாலை நிறுவனத்தின் மூலம் அமைக்கப் பட்டுள்ள விசைத்தறி ஆலைகள்

* வினா எண் 37— திரு. ச. பாலகிருஷ்ணன்: திரு. செ. செம்மலை: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பஞ்சாலை நிறுவனத்தின் மூலம் அமைக்கப்பட்ட விசைத்தறி ஆலைகள் எத்தனை? அவை எங்கெங்கு உள்ளன?

(ஆ) இந்த ஆண்டு புதிய ஆலைகள் ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, (அ) மூன்று, சிவகிரி, பெரியார் மாவட்டம், அருப்புக்கோட்டை (முகவை மாவட்டம்) மற்றும் ஜெயங்கொண்ட சோழபுரம் (திருச்சி மாவட்டம்) ஆகிய இடங்களில் ஏற்கனவே விசைத்தறிகள் இருக்கின்றன. சுமார் 50 லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பணிகள் தொடங்கப் பட்டிருக்கின்றன. மற்றும் பரமத்தூர் (புதுக்கோட்டை மாவட்டம்) தாராபுரம் (பெரியார் மாவட்டம்), குமாரசாமி பேட்டை (தர்மபுரி மாவட்டம்) தளவாய்புரம் (இராமநாதபுரம் மாவட்டம்) ஜெக்கம்பட்டி (மதுரை மாவட்டம்) சங்கரன் கோயில் (திருநெல்வேலி மாவட்டம்) ராசிபுரம் (சேலம் மாவட்டம்) ஆகிய இடங்களில் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) ஆம். இந்த ஆண்டு சுமார் 70 விசைத்தறி ஆலைகள் நிறுவுவதற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்திருக்கிறது. இவற்றின் மதிப்பு சுமார் $3\frac{1}{2}$ கோடி ரூபாய் ஆகும்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிதாக விசைத்தறி ஆலைகள் ஆரம்பிக்கவேண்டும் என்றால் என்னென்ன விதிமுறைகளை அரசு போட்டிருக்கிறது. எந்த அடிப்படையில் இடங்களை தேர்ந்தெடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரிமைகள் வழங்குவது மத்திய அரசு. எத்தனை விசைத்தறிகள் என்ற அனுமதியை அளிப்பது மத்திய அரசு எந்த மாவட்டத்தில் போடுவது என்பதை

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS